**தேவாரப் பதிப்புகள்**

**முனைவர்அ. மோகனா உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை - 09**

பொதுவாகத் தமிழியலாய்வு இயங்குதளத்தில் இலக்கியங்கள், உரைகள், இலக்கணங்கள் இவை குறித்த ஆய்வுகளுக்கு அளிக்கப்படும் அங்கீகாரம் பதிப்பு வரலாற்றிற்கு அளிக்கப்படுவதில்லை. சமீபகாலமாகப் பதிப்பு வரலாறு குறித்த சில பதிவுகளும் புரிதல்களும் கவனப்படுத்தப்பட்டு வருகின்றன.இருப்பினும் அவை ஒரு வாய்பாட்டுத் தன்மையில் தொடக்ககாலப் பதிப்பாசிரியர்களையும் செவ்விலக்கியப் பதிப்பு வரலாற்றையும் மையமிட்டதாகவே உள்ளன. தமிழுலகைப் பொறுத்தவரை பதிப்பு வரலாறு மிக நீண்டது; விரிவானது. பதிவு செய்யப்படாமல் போன வெளிகள் அதிகம் இந்தப் பின்புலத்தில் 1864 தொடங்கி நடைபெற்ற தேவாரப் பதிப்புகள் குறித்த சில கவன ஈர்ப்பினை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

அச்சுக்கருவியின் பயன்பாடு காலனிய ஆதிக்கம், கிறித்தவ மிஷனரிகளின் ஆக்கிரமிப்பு ஆகியவற்றைக் கடந்து பொதுவெளிக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிடைத்தது. அதன் தொடர்ச்சியாகப் பதிப்பு என்னும் துறை தமிழ்ச்சமூகத்தில் புலமைச்செயல்பாடாக உருப்பெற்றது. ஓலையிலிருந்து அச்சுக்கு மாற்றுதல் என்கிற ஒற்றைப்புரிதலில் அச்சுப்பண்பாட்டினை வரையறுக்க இயலாது. தொல் வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்கின்ற பணியாகவே இதனைப் புரிந்துகொள்ள முடியும்.

அச்சுக்கருவியின் பயன்பாடு தமிழ்ச்சூழலில் பாடபுத்தகங்கள், புராணங்கள், பிரபந்த இலக்கியங்கள் ஆகியவற்றை மையமிட்டிருந்த காலகட்டத்தில் உ.வே.சாமிநாதையர், சி.வை.தாமோதரம்பிள்ளை ஆகியோரால் தொல்பழம்பிரதிகளை மீட்டெடுக்கும் மடைமாற்றத்தினைப் பெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை தேவாரப் பிரதிகளின் அச்சாக்கத்தினைக் காணஇயலவில்லை. இன்று பண்முறை, தலமுறை என்ற பகுப்புகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ள தேவாரப் பிரதிகளின் அச்சுவரலாறு 1864ஆம் ஆண்டிலிருந்துதான் தொடங்குகின்றது. மூலத்தைத் தேடிப் பதிப்பிக்கின்ற முயற்சியே தொடக்க காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் உரையுடன் கூடிய பதிப்பு சாத்தியப்பட்டது. இப்பதிப்புகளின் தன்மைகளைக் கீழ்க்கண்ட நிலைகளில் புரிந்துகொள்ளலாம்.

- தேவாரப் பதிகங்களை முழுவதுமாக ஆளுமைகளின் அடிப்படையில் பதிப்பித்தல்
- தேவாரப் பதிகங்களைத் தலங்களின் அடிப்படையில் தொகுத்துப்பதிப்பித்தல்
- குறிப்பிட்ட சில பதிகங்களை மட்டும் தேர்ந்தெடுத்து பிற பக்தி ஆளுமைகளின் பாடல்களோடு பதிப்பித்தல்
- குறிப்பிட்ட தலத்தில் தேவார மூவரால் பாடப்பட்ட பதிகங்களை மட்டும் கையடக்கப்பதிப்பாக வெளியிடுதல்.

அச்சுகருவிகளின் பயன்படுத்தத்தில் தேவாரப் பிரதிகள் பிற இலக்கியங்களைக் காட்டிலும் காலத்தால் பிற்பட்டே இடம்பெற்றுள்ளன. இதற்கு இவற்றின் சமூக மதிப்பும் காரணமாக இருக்கலாம். நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் கொச்சக ஒருபோகு குறித்துப் பேசுமிடத்து, ‘பதிகப் பாட்டிற்கு ஈண்டுக் கூறிய வேறுபாடுகள் திருவாய்மொழி, திருப்பாட்டு, திருவாசகம் என்கின்ற கொச்சக ஒருபோகுகளில் காண்க உலகவழக்கன்மையால் அவை காட்டாமையினாம்’ என்று கூறியுள்ளது இங்குக் கருதத்தக்கது. தேவாரப் பாடல்கள் வடமொழியின் வேதங்களுக்கு இணையாக மறை என்ற நிலையிலான சமூக மதிப்பினைப் பெற்றிருந்தமையால் அவற்றை அச்சிடும் முயற்சி முன்னெடுக்கப்படாமல் இருந்திருக்கலாம். முதன்முதல் திருமயிலை சுப்பராய ஞானியார் சம்பந்தரின் முதல் மூன்று திருமுறைகளையும் திருவாவடுதுறை ஆதீனப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு காஞ்சிபுரம் சபாபதி முதலியார் அவர்களால் ஆராய்ச்சி செய்வித்து, அப்பாவுபிள்ளை, நமசிவாய முதலியார் ஆகியோரது பொருள் உதவிகொண்டு, குமாரய்யர் அவர்களுக்குச் சொந்தமான கலாநிதி அச்சுக்கூடத்தில் ருத்ரோத்காரி ஆண்டு ஐப்பசி திங்கள் (கி.பி.1864) பதிப்பித்து வெளியிட்டார். அடுத்துச் சுந்தரரின் ஏழாம் திருமுறையினைத் திருவாவடுதுறை ஆதீனப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு அதே காஞ்சிபுர வித்துவான் சபாபதி முதலியார் அவர்களால் ஆராய்ச்சி செய்வித்து, அதனைச் சண்முகவிலாச அச்சுக்கூடத்திலும் கலாநிதி அச்சுக்கூடத்திலுமாகக் குரோதன ஆண்டு ஆனித்திங்கள் (1865) பதிப்பித்துள்ளார். சம்பந்தர் தேவாரம் அச்சில் வெளிவந்த எட்டு மாதங்களுக்குள் சுந்தரர் தேவாரம் அச்சேறியது குறிப்பிடத்தக்கது. நாவுக்கரசர் அருளிச்செய்த நான்கு ஐந்து ஆறு ஆகிய மூன்று திருமுறைகளையும் திருவாரூர் செப்பேட்டின்படி பனையோலையில் எழுதுவித்த தருமபுர ஆதீனத்தில் இருந்த பிரதியை அடிப்படையாகக் கொண்டு அதே சபாபதி

முதலியார் அவர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்வித்து, ஆதிநாராயணபிள்ளையவர்கள் உதவியைக் கொண்டு, கலாநிதி அச்சுக்கூடத்திலும் புஷ்பரத செட்டியாருடைய கலாரத்னாகர அச்சுக்கூடத்திலுமாக அக்ஷய ஆண்டு புரட்டாசித்திங்கள் (கி.பி.1866) பதிப்பித்து வெளியிட்டார். சுந்தரர் தேவாரம் வெளிவந்த பதினைந்து மாதங்களுக்குள் நாவுக்கரசர் தேவாரம் பதிப்பிக்கப்பெற்றது. இவ்வாறு கி.பி. 1864-1866இல் பண்முறையில் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்ற மூவர் தேவாரமும் மூன்று தனித்தனி நூல்களாகப் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. மேற்குறித்த பதிப்புகளின் மூலம் குறிப்பிட்டதொரு பதிப்பு முறைமை அக்காலத்தில் தொழிற்பட்டுள்ளமையினை அறியமுடிகின்றது. முதலில் சுவடிகளைத் திரட்டுதல், அதனைக் குறிப்பிட்டதொரு ஆளுமையின் மூலம் ஆராய்ச்சி செய்வித்தல் பின்னர் பதிப்பித்தல் என்கிற படிநிலை முறைமையினைப் பின்பற்றியுள்ளனர்.

கி.பி.1864-66 இல் பதிப்பிக்கப்பெற்ற தேவார நூல்கள் எவ்வளவு பிரதிகள் அச்சிடப்பெற்றன என்ற செய்தி தெரியவில்லை. மேலும் இத்தனை பிரதிகள் அச்சிடப்பெற்றன என்று குறிப்பிடும் வழக்கம் இன்றுவரை வெளிவந்துள்ள தேவாரப் பதிப்புகளில் காணஇயலவில்லை.

சுப்பராய ஞானியார் ஞானசம்பந்தர் தேவாரத்தின் இரண்டாம் பதிப்பினை வேளானூர் தெய்வசிகாமணி முதலியார் உதவியால் சென்னை பாஸ்டர் அண்டு கோ அச்சுக்கூடத்தில் ஈசுவர ஆண்டு ஆடி மாதத்திலும் (கி.பி.1875) சுந்தரர் தேவாரத்தின் இரண்டாம் பதிப்பினை அதே ஆண்டு அடுத்த சில மாதங்களுக்குள்ளும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அதற்குப் பின்னரான தேவாரப் பதிப்பு முயற்சிகள் ஏதும் இவரால் மேற்கொள்ளப்பெறவில்லை.

நாவுக்கரசரின் தேவாரப் பிரதியாக உமாபதி சிவாசாரிய சுவாமிகள் ஆதீனத்தில் இருந்த ஏட்டுச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு, காஞ்சிபுரம் திருச்சிற்றம்பல ஞானியார் அவர்களால் ஆராய்ச்சி செய்யப்பெற்ற 'பண்முறை நாவுக்கரசர் தேவாரம்' பாதரக்குடி ஆ.சொக்கலிங்கம் பிள்ளையவர்களால் பாஸ்டர் அச்சுக்கூடத்தில் கி.பி.1879 இல் பதிப்பிக்கப்பெற்றது.

மேற்குறித்த பதிப்புகள் அனைத்தும் பண்முறையில் தொகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டவை. இப்பதிப்புகளில் முகப்பாக காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. சுப்பராய ஞானியவர்களால் பதிப்பிக்கப் பட்ட அனைத்துப் பதிப்புகளிலும் காரைக்காலம்மையாரின் பாடல்கள் முகப்பாக இடம்பெற்றுள்ளமை கவனிக்கத் தக்கது. பதினோராம் திருமுறை 1869 இல் தான் புஷ்பரதச்செட்டியாரால் முழுவதுமாகப் பதிப்பிக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்னதாகவே காரைக்காலம்மையாரின் பாடல்கள் தேவாரத்தோடு இணைத்துப் பதிப்பிக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தலபுராணங்களின் தாக்கத்தில் தேவாரப் பாடல்களையும் தலங்களின் அடிப்படையில் தொகுத்துப் பதிப்பிக்கின்ற முயற்சி சில நிறுவனங்களால் முன்னெடுக் கப்பட்டது. வணிக ரீதியில் இம்முயற்சி பெரிதும் வெற்றிபெற்றுள்ளது. தனித்த ஆளுமைகளின் பதிகங்களைத் தலங்களின் அடிப்படையில் தொகுக்கும்போது குறிப்பிட்ட தலம் குறித்த புரிதல் சாத்தியமாகின்றது. முன்னர்க் குறித்தபடி தலபுராணங்கள் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கு தேவாரத்தில் தலமுறை பதிப்பினைச் சாத்தியப்படுத்தியது எனலாம்.

திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய தேசிகரின் ஆணைக்கிணங்க திருப்பனந்தாள் காசிவாசி இராமலிங்கசுவாமிகளின் வேண்டுகோளின்படி, திருவாவடுதுறை ஆதீன ஓதுவார் ஓதின பண்ணின்படி மதுரையாதீனம் திருவாவடுதுறையாதீனம் முதலிய இடங்களில் இருந்த பிரதிகளை ஒப்பிட்டு மதுரை இராமசாமிப்பிள்ளை என்னும் ஞானசம்பந்தப்பிள்ளை சென்னை புஷ்பரத செட்டியாரது கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் விஷூ ஆண்டு மார்கழித் திங்கள் (1881) தலமுறையாகத் தேவாரம் முழுதையும் முதன்முறையாகப் பதிப்பித்து வழங்கினார்.

இப்பதிப்பு வணிகரீதியில் பெற்ற வெற்றியின் தொடர்ச்சியாகப் பதின்மூன்று ஆண்டுகள் இடைவெளியில் தலமுறைத் தேவாரம் மீண்டும் தருமையாதீனத் தலைவர் தவத்திரு சிவஞான தேசிக மூர்த்திகள் ஆணையின்படி, திருப்பனந்தாள் காசிவாசி சுவாமிநாதசுவாமிகள் விரும்பிய வண்ணம் திருமயிலை செந்தில்வேல் முதலியாரால் சென்னை விக்டோரியா ஜுபிலி அச்சுக்கூடத்தில் விஜய ஆண்டு சித்திரைமாதம் (1894) முதற்பதிப்பாகவும் அதே செந்தில்வேல் முதலியாரால் சென்னை கலாரத்நகார அச்சுக்கூடத்தின் வாயிலாகக் குரோதி ஆண்டு தைத்திங்கள் (1905) இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்தது.

பிறிதொருபுறம் பண்முறை அடிப்படையிலான தொகுப்புகளும் பதிப்பிக்கப்பட்டுவந்தன. திருவேங்கட நாயுடு அவர்களால் பார்வையிடப்பட்டுச் சண்முக முதலியார் அவர்களால் சென்னை ஆறுமுக விலாச அச்சுக்கூடத்தில் கி.பி.1898இல் பண்முறைத் தேவார அடங்கன்முறை மூன்றாம் முறையாகப் பதிப்பித்து வெளியிடப்பெற்றது.

பத்தாண்டுகளுக்கு உள்ளாகவே மீண்டும் பண்முறைத் தேவார அடங்கன்முறைப் பிரதிக்குத் தேவை ஏற்படவே, அது திருமுறை வரலாறு, மூவர் சரித்திரக் குறிப்பு முதலியவற்றுடன், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளையவர்களால் பார்வையிட்ட பிரதிக்கு இணங்க, எஸ்.பி.ராஜாராம் அவர்களால் தமது ஸன் ஆப் இந்தியா அச்சியந்திரசாலையில் கி.பி1906 இல் பதிப்பிக்கப்பட்டது. பதினோராண்டுகளுக்குப் பின் இதன் மறுபதிப்பு கி.பி.1917 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் வெளிவந்தது. இதனை நமசிவாய முதலியார் அவர்கள் தமது நிரஞ்னவிலாச அச்சியந்திரசாலையில் பதிப்பித்து வெளியிட்டார்.

இந்த 1906ஆம் ஆண்டுப் பதிப்பை அடுத்து, பங்காளம் அப்பு பிள்ளையவர்கள் புலவர் பலரோடு பல பிரதிகளை ஒப்பிட்டு, சென்னை நேஷனல் அச்சுக்கூடத்தின் வாயிலாக கி.பி.1907 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல்நாள் பண்முறைமூவர் தேவாரப் பதிப்பு ஒன்றை வழங்கினார். இப்பதிப்பு வரையில் மூவர் பாடிய தேவாரப் பாடல்களின் எண்ணிக்கை குறித்த குறிப்புகளோ அவை பற்றிய தகவல்களோ தேவாரப் பதிப்புகளில் இடம்பெறவில்லை.

ஒரே திருமுறையாக அமைந்த சுந்தரர் தேவாரம், தலமுறைப்படி நாகலிங்க முதலியார் அவர்களால் பல சுவடிகளையும்கொண்டு பரிசோதிக்கப்பெற்றுக் கீலக ஆண்டு ஐப்பசித்திங்கள் (கி.பி.1908) ஆதிமூலம்செட்டியார் அவர்களால் சென்னை கலாரத்நகார அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றுவெளிவந்தது. செய்யுள் முதற்குறிப்பு அகராதியை நூல் இறுதியில் பதிப்பித்து வழங்கும் வழக்கம், தேவாரத்தைப் பொறுத்தவரையில் இப்பதிப்பிலேயே தொடங்கியது எனலாம். மேலும் 8250 பாடல்கள் என்கிற எண்ணிக்கையும் இப்பதிப்பின் மூலமே கிடைக்கின்றது.

பல்லாண்டுகளாகப் பல பிரதிகளைக்கொண்டு யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச் சாமிநாத பண்டிதர் அவர்கள் ஆராய்ந்து தாம் புதியனவாக எழுதிய பல செய்திகளுடன் சென்னை சைவ வித்யாநுபாலன அச்சியந்திரசாலை வாயிலாக வெளியிடப்பட்ட தலமுறை மூவர்தேவார அடங்கன்முறைத் தொகுதி சாதாரண ஆண்டு பங்குனிமாதம் (கி.பி.1911) வெளிவந்தது.

இவ்வாறு பண்முறையிலும் தலமுறையிலும் அச்சிடப்பட்ட தேவாரப்பிரதிகளில் பதிப்புரை, முன்னுரை போன்ற எந்தப் பகுதிகளும் இடம்பெறவில்லை. பதிகஅட்டவணை, பிழைதிருத்தம் ஆகியவையே தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தன. பாடபேதம் அளிக்கின்ற முறைமையும் இத்தொடக்ககால அச்சுப் பிரதிகளில் காணப்படவில்லை. மேலும் சீர்கள் பிரிக்கப்படாமல் சில பதிகங்கள் நான்கு அடிகளாகவும் சில பதிகங்கள் சுவடியிலுள்ள பத்திகளாகவுமே பதிப்பிக்கப்பட்டுள்ளன. சில பகுதிகளில் குறிப்புகள் தருவதனை மட்டும் காணமுடிகின்றது. சம்பந்தரின் திருக்கலையநல்லூர் பதிகத்தின் 'பெருந்தேவர் சிரந்தோள் பற்கரங்கண் பீடழியச்' என்றுதொடங்கும் ஒன்பதாவது பாடலுக்குக்கீழ் 'எச்சன்சிரம், இந்திரன்தோள், சூரியன்பல், அக்கினிதேவன் கரம், பகன் என்னும்பெயருள்ள மற்றொரு சூரியன் கண் இவை பீடமிழந்தவை.' என்று குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 'அரிசிலின் றென்கரைமேல்' என்ற பாடல் தொடருக்கு 'விஷ்ணுவினாற் சொல்லப்பட்டு வந்தமையால் அரிசொல் நதியென்று பெயர் அது அரிசில் என மருவியிருக்கின்றது. இதனைக் கும்பகோண புராணத்திற் கண்டுகொள்க.' (1864:25) என்று குறிப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறே திருவெண்ணெய் நல்லூரும் திருநாவலூரும் என்னும் பதிகத்தின் மூன்றாவது பாடலில் 'கடற்கோடி' என்பது கோடிக்குழகரென்னுந்தலம், மோடி என்பது அங்குக் கோயில் கொண்டிருக்கும் துர்க்கை (1864:26) என்ற குறிப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. 'முதுகுன்றமென்னும் விருத்தாசலத்தில் பரமசிவம் அருளிச்செய்த பொன்னை மணிமுத்தாநதியிலிட்டுப் போய்த் திருவாரூர்க் கமலாலயமென்னுந் திருக்குளத்தி லிறங்கிக் கையால்தடவும்போதோதிய பதிகம் அவ்வாறு தடவும்போது ஏத்தாதிருந்தறியேனென்னுந் தேவார மோதுகையில் பொருளகப்பட்டது.' (1864:38) என்று முதுகுன்றத் திருப்பதிகத்திற்குக் குறிப்பு அளிக்கப் பட்டுள்ளது. முதற்பதிப்பில் அளிக்கப்பட்ட இக்குறிப்புகள் தொடர்ந்து வந்த பிற பதிப்புகளிலும் அவ்வாறே அளிக்கப்பெற்றுள்ளன. மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்ட இத்தொடக்ககால முயற்சிகள் தல அடிப்படையிலான பதிப்பு என்னும் நிலையில் வணிகநோக்கிலான அடுத்த கட்ட நகர்வினைப் பெற்றன. இப்பதிப்புகள் யாவும் தேவாரப் பாடல்களைப் பாராயணம் செய்தல் என்கிற வெகுசன நுகர்வினை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டு நிலைகளில் தேவாரப் பதிப்புகள் தொழிற்பட்டன. ஒன்று இப்பாடல்களைப் பொருள் புரிந்து படிக்க வசதியாக உரையுடன் பதிப்பிக்க முயன்றனர். பிறிதொருபுரம் சில பதிகங்களை மட்டும் தேர்ந்தெடுத்து தாயுமானவர், இராமலிங்கர் ஆகியோரின் பாடல்களோடு சேர்த்து அச்சுப்போட்டனர். 1915-1919 வரை இவ்வகையிலான பதிப்புகள் தொடர்ந்துள்ளன. தேவாரத் தோத்திரத்திரட்டு என்கிற பெயரில் சைவசமயசாரிகளாகிய நால்வரது சரித்திரமும் தேவார திருவாசகத் திருமுறைகளினின்றும் தாயுமானவர் திருப்பாடல்களினின்றும் இராமலிங்கசுவாமி திருவருட்பாவிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டனவற்றை ஒருங்குசேரத்திரட்டி வித்தியாரத்தினாகர அச்சுக்கூடத்தில் 1915ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. அதே ஆண்டு சக்ரவர்த்தி அச்சுக்கூடத்திலும் இரண்டாம் பதிப்பாக இத்திரட்டு வெளிவருகின்றது. 1916 ஆம் ஆண்டு அதாவது ஓராண்டு இடைவெளியில் சாஸ்திர ஸஞ்சீவிநி அச்சியந்திரசாலையில் வெளியிடப்பட்டது. சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரது பாடல்கள் மட்டுமே தேவாரம் என்று கருதப்பட்ட நிலையில் மாணிக்கவாசகர், தாயுமானவர், இராமலிங்கர் ஆகியோரின் பாடல்களையும் தேவாரத் தோத்திரத்திரட்டு என்கிற பெயரில் வெளியிட்டிருப்பது கவனத்திற்குரியது. இத்தேவாரத் தோத்திரத்திரட்டு 1919 ஆம் ஆண்டு மீண்டும் திருவேங்கட முதலியார் அவர்களால் சென்னை வாணீ விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இப்பதிப்புகளில் சம்பந்தரின் பதினைந்து பதிகங்கள், நாவுக்கரசரின் முப்பது பதிகங்கள், சுந்தரரின் பதினோரு பதிகங்களோடு மாணிக்கவாசகரின் பன்னிரண்டு பாடல் தொகுதிகளும் தாயுமானவரின் பதினெட்டுப் பாடல்கள் இராமலிங்கரின் ஒரு பாடலும் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளன. எந்த அடிப்படையில் இப்பதிகங்களும் பாடல்களும் தொகுக்கப்படுகின்றன என்பதற்கான குறிப்புகள் எதுவும் இப்பதிப்புகளில் இடம்பெறவில்லை. தேவாரமூவர் மற்றும் மாணிக்கவாசகரின் வரலாறுகள் மட்டும் சுருக்க உரைநடை வடிவில் அளிக்கப்பெற்றுள்ளன. இத்தோத்திரத் திரட்டுகள் மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றிருந் தமையினை இவற்றின் தொடர்ச்சியான பதிப்புகளின் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

இவ்வாறு திரட்டுகளாகத் தேவாரப் பாடல்கள் பதிப்பிக்கப்பட்ட நேரத்தில் தேவாரம் முழுமைக்கும் உரை எழுதி அச்சிடும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. காஞ்சிபுரம் மகாவித்வான் ஸ்ரீமத் இராமாநந்த யோகிகள் பண்முறைச் சுந்தரர் தேவாரத்திற்குப் பதவுரை பொழிப்புரை கருத்துரை விசேடவுரை ஆகியவற்றை எழுத, பண்முறைச் சுந்தரர் தேவாரம் உரை விளக்கங்களுடன் பு.சண்முக முதலியார் அவர்களால் சென்னை மதராஸ் டைமண்ட் பிரஸில் கி.பி.1913இல் அச்சிடப்பெற்று வெளிவந்தது. இப்பழைய பதிப்புகளுக்குப் பின் வந்த பதிப்புகள் யாவும் இந்த அச்சுப் புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டு பதிப்பிக்கப்பெற்றன. 1925இல் வெளியான பதிப்பும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. குறிப்பிட்ட தலத்தில் மூவர் பாடிய பதிகங்களை மட்டும் தொகுத்துப் பதிப்பித்த முயற்சியும் சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை தற்போதைய திரையிசைப் பாடல் புத்தக வடிவில் உள்ளன. திருக்குற்றாலத் தலத்தில் சைவசமாயாசாரியர்களாகிய மூவர் பாடிய பதிகங்களைத் தொகுத்து மிறுத்யுஞ்சய நீலகண்டம் அடுமை ஆத்தூர், ரா.ம.சுப்பிரமணியபிள்ளை அவர்களால் பிரசுரிக்கப்பெற்று தென்காசி ஸ்ரீ ராமானுஜம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பெற்றுள்ளது.

இப்பதிப்பிலும் பதிப்புரை, முன்னுரை போன்ற எந்த குறிப்புகளும் இடம்பெறவில்லை. ஆனால் பின்புற அட்டையில் இடம்பெற்றுள்ள விளம்பரம் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

இனாம்இனாம் ‘சைவ சமையாசாரியர்களால் பாடல்பெற்ற ஸ்தலமாகிய திரிமூர்த்திகள் தங்கும் திருக்குற்றால மகாத்தியம்’ ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு புஸ்தகம் ஒன்று இனாமாயனுப்பப்படும்.

டி.எஸ்.குருசாமிப்பிள்ளை, பைண்டர், ஸ்ரீராமானுஜம்பிரஸ், தென்காசி

இப்புஸ்தகம் விற்கிறவரிடத்திலும், மேற்படி புஸ்தகம் முக்காலணா விலைகொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தலபுராணங்களுக்கும் தலமுறைத் தொகுப்பிற்கும் இவ்வாறு குறிப்பிட்ட தலத்தை மட்டும் பாடிய பதிகங்களைத் தொகுத்துப் பதிப்பிக்கின்ற முறைமைக்குமான உறவு இங்கு நோக்கத்தக்கது.

1925க்குப் பிறகு தேவாரப் பதிப்புச் செயல்பாடு நிறுவனம் சார்ந்த மிகப்பெரும் வணிகச்செயல்பாடாக முன்னெடுக்கப்பட்டது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்களைக்கொண்டு கி.பி.1927 பிப்ரவரி மாதத்தில் சம்பந்தர்

தேவாரத்தையும் கி.பி.1928 பிப்ரவரி மாதத்தில் நாவுக்கரசர் தேவாரத்தையும் கி.பி.1929 ஏப்பிரலில் சுந்தரர் தேவாரத்தையும் பண்முறையை ஒட்டித் தனித்தனி நூல்களாக அச்சிட்டு வழங்கியது.

அடுத்து, பண்முறை தேவாரம் சைவ சித்தாந்த சமாஜத்தின் பதிப்பாக கி.பி.1929-31இல் மூன்று தொகுப்புகளாக மிகக் குறைந்த விலையில் வெளியிடப்பெற்றது. இளமுருகனார் பதிப்பித்த பண்முறை அடங்கன்முறை தேவாரம் பல செய்திகளுடன் ஒரே தொகுப்பாக மிகக் குறைந்த விலையில் 1953இல் வெளிவந்தது. இளமுருகனாரின் பதிப்பே இன்றுவரை பல நிறுவனங்களாலும் ஆராய்ச்சியாளர்களாலும் பயன்படுத்தப் படுகின்ற பதிப்பாக உள்ளது. இப்பதிப்பில் தான் கல்வெட்டுமூலம் கிடைக்கப்பெற்ற சம்பந்தரின் திருவிடைவாய்ப் பதிகமும் கிளியன்னவூர்ப்பதிகமும் இடம்பெற்றன. இப்பதிகங்களின் பாடல் தொகையினையும் சேர்த்து 2872 பாடல்களாகத் தேவாரப் பாடல்கள் கணக்கிடப்பட்டன. கிளியன்னவூர்ப்பதிகம் பி.ஜானகிராம முதலியாரிடம் பெற்று சித்தாந்தம் மலர் 5 இதழ் 11 (1932)இல் வெளியிடப்பட்டது. கி.பி.1953 முதல் 1964 வரை தனித்தனி ஏழு திருமுறைகளும் விளக்கங்களுடன் தருமபுர ஆதினப் பதிப்புகளாக வெளிவந்தன.

1941 இல் வெளிவந்த சில பதிப்புகள் இந்நிலையில் கருதத்தக்கன. திருக்குற்றாலத் திருப்பதிகங்கள் தொகுத்து அளிக்கப்பட்டதைப் போலவே திருவேட்டக்குடி குறித்த பதிகங்கள் மட்டும் தொகுத்து அச்சிடப்பட்டுள்ளன. திருவேட்டக்குடித் தேவாரத் திருப்பதிகம் இஃது திருநெல்வேலி, மணிவாசக ஞானசம்பந்த சபை அத்யக்ஷகர், பா.சிதம்பரநாத பிள்ளை அவர்களால் எழுதிய அருஞ்சொற் குறிப்புகளுடன் திருவேட்டக்குடிச் சிவாலய தரும பரிபாலகர் தேவகோட்டை, திருவாளர் மெ.லெ.ராம இலக்குமணன் செட்டியார் அவர்களால் மாயவரம் வஸந்தா பிரஸில் அச்சிட்டு, விக்ரம ஆண்டு மாசி மாதம்நிகழ்ந்த மகத்திருவிழாவில் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றதாக அப்பதிப்பில் குறிப்பு உள்ளது. மேலும் அப்பதிப்பில் எழுதப்பட்டுள்ள முன்னுரை திருவேட்டக்குடி தலத்தின் பெருமையினையும் எதற்காக இம்முயற்சி மேற்கொள்ளப் பட்டது என்கிற காரணத்தினையும் தெரிவித்துள்ளது.

திருவேட்டக்குடி சோழநாட்டிலே உள்ள ஒரு சிவக்ஷேத்திரம். இதற்குத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரச நாயனார் தேவாரமும் இன்னும் சில ஆன்றோரது திருவாக்குகளும் பாடப்பெற்ற மகிமை உள்ளது. இச்சேத்திரமான்மியத்திலே அம்மை தவஞ்செய்து வரம் பெற்றது, தேவர்கள் பூஜை செய்தது. அர்ச்சுனன் தவஞ் செய்து பாசுபாஸ்திரம் பெற்றது. அனவரத மகாராஜன் தரிசனம் செய்து புரந்தருளிய ஐயடிகள் காடவர்கோன் என்னும் அரசன் சிவஸ்தலங்கள்தோறும் சென்று திருப்பணிகள் செய்து அவ்வத்தலங்களுக்குத் தனித்தனி வெண்பாப்பாசுரங்கள் பாடிவரும்போது இத்தலத்துக்கு வந்து வெண்பாப்பாடித் தொண்டு செய்து வசித்துவருங்கால் சுவாமி காட்சி தந்து மோட்சங்கொடுத்தருளப் பெற்றது முதலிய மகிமைகள் உள்ளன. வடமொழியிலுள்ள இந்த க்ஷேத்திர மான்மியத்தைத் தமிழில் புராணச் செய்யுளாகவும், வசனமாகவுஞ் செய்து அச்சிட்டு வெளியாயிருக்கிறது... இத்திருவேட்டக்குடி யெனும்சிவஸ்தலம் சுவாமி தெரிசனஞ் செய்ய வருபவர்களுக்கும் மிக வசதியான இடம். கடற்கரைப் பக்கமாயுள்ளது. சோலைவளஞ் செறிந்தது நல்ல தண்ணீர் வசதி உள்ளது. நெய், பால், தயிர், காய்கறி, அரிசி சாமான்கள் நயமாய் கிடைக்கக்கூடியது. (1941:2,3)

கி.பி.1953 முதல் 1964 வரை தனித்தனி ஏழு திருமுறைகளும் உரைவிளக்கங்களுடன் தருமபுர ஆதீனப் பதிப்புகளாக வெளிவந்தன. யாப்பு அடிப்படையில் சீர்களைப் பிரித்து பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. கி.பி.1968இல் திருப்பனந்தாள் காசிமடத்துப் பதிப்பாகத் தலமுறை தேவாரம் முழுமையும் ஒரே தொகுப்பாக வெளியிடப்பட்டது. சீர்கள் பிரிக்கப்படாமல் அடிகள் மட்டும் வரையறுக்கப்பட்டுப் பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. திருப்பனந்தாள் காசிமடம் தனித்தனியாகத் தேவார மூவரின் பதிகங்களைத் தலமுறையில் தொகுத்துப் பதிப்பிக்கின்ற பணியினை 1950கள் தொடங்கி 1978 வரை தொடர்ச்சியாகச் செய்துவந்துள்ளது. 1979 - 1980இல் பூம்புகார் கல்லூரிப் பதிப்பாகப் பண்முறையில் திருநாவுக்கரசர் தேவாரம் வெளிவந்துள்ளது. அவ்வாறே பண்முறையை ஒட்டி முறையே 1981,1982இல் சுந்தரர், நாவுக்கரசர் தேவாரங்கள் திருவாவடுதுறை ஆதினத்தாரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேற்குறித்த பதிப்புகள் மட்டுமன்றி வரலாற்றுமுறை பதிப்பும் தேவாரப் பதிகங்களுக்கு உள்ளது. அற்புதங்களின் அடிப்படையில் இவற்றைப் பதிப்பித்த போக்கினையும் காணமுடிகின்றது. 1984 ஆம் ஆண்டு தி.வே.கோபலையர் கொண்டு வந்த பண்முறைத் தேவாரப் பதிப்பு தேவாரத்திற்கான சிறந்த ஆராய்ச்சி பதிப்பாக உள்ளது. இளமுருகனாரின் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டே தி.வே.கோபாலையரின் பதிப்பு உருப் பெற்றுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருப்பெற்ற தேவாரப் பதிப்புகளில்தான் சீர்பிரித்துப் பதிப்பிப்பிக்கப்பட்ட பாடல்களைக் காணமுடிகின்றது. யாப்பு அடிப்படையில் சீர்களை வரிசைபடுத்திய பதிப்புகளும் தருமபுரம் உள்ளிட்ட ஆதினங்களால் வெளியிடப்பட்டுள்ளன.இந்நிலையில் தி.வே.கோபாலையர் தனது பதிப்பு முயற்சிக்கான காரணத்தினை,

> தேவாரப் பாடல்களைச் சீர்பிரித்து அடி வரையறுத்துப் பதிப்பித்த பதிப்புக்களே முன்னைய பதிப்புக்கள் ஆதலின், ஓரளவே தமிழ் கற்றவர் எளிதில் சொற்களைப் பிரித்துப் பொருள் உணர்ந்து சுவைத்துப் படித்தற்கண் இடர்ப்பாடு பெரிதும் ஏற்படுகிறது. ஆதலின், சீர்பிரிப்பைப் பற்றிப் பெரிதும் கருதாது பொருள் விளங்குதல் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, சொற்களைப் பிரித்து ஏற்ற இடங்களில் நிறுத்தக்குறிகளை அமைத்துப் பாடலைப் படித்த அளவிலேயே ஓரளவு பொருள் உணருமாறு செய்து, அருஞ்சொல் சொற்றொடர் இவற்றின் பொருள்களை இறுதியில் தந்து அமைக்கப்படும் பதிப்பு ஒன்று இப்போது தேவைப்படுவதாகிறது. (தேவார ஆய்வுத்துணை:viii)

என்று விளக்கியுள்ளார். தனிநபர் நிறுவனங்களால் வெளியிடப்பட்ட பதிப்புகள் முழுவதும் வணிக நோக்கத்தினையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆதீனங்களால் வெளியிடப்பட்ட பதிப்புகள் சைவத் திருமுறைகள் என்னும் நிலையில் அவற்றின் பொருள், சிறப்பு ஆகியவற்றை மையமிட்ட பதிப்புகளாக அவை உருப்பெற்றன. இவற்றைக் கடந்து தி.வே.கோபாலையர் முதலிய ஆய்வறிஞர்களால் உருவாக்கப்படுகின்ற பதிப்புகளே தேவாரம் குறித்த முழுமையான புரிதலையும் அதில் ஆய்வுமேற்கொள்வதற்கான களத்தினையும் தருவனவாக உள்ளன.

**துணை நின்ற பதிப்புகள்**

1863 சைவசமயாசாரிகளில் முதல்வராகிய திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் திருமுறை மூன்றும்/ கயிலாய பரம்பரையாகிய திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதிக்கிணங்க வித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரவர்களால் ஆராய்ச்சிசெய்து திருநெல்வேலி அப்பாவுபிள்ளை யுதவியினாலும் வாயிலா நெல்லூர் நமசிவாயமுதலியார் உதவியினாலும் திருமயிலை சுப்பராயஞானியாரால் பால்குரிகி குமாரையரவர்களது கலாநிதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, ருத்திரோற்காரி, அர்ப்பசி

1865 சைவசமயாசாரியார்களில் ஒருவராகிய நம்பியாரூரரென்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகத்திருமுறை/ கயிலாய பரம்பரையாகிய திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதிக் கிணங்க வித்துவான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரவர்களால் ஆராய்ச்சி செய்வித்து தருமயிலை சுப்பராயஞானியாரால் பதிப்பிக்கப்பட்டது. சண்முக விலாச அச்சுக்கூடம்.

1877 சைவசமயசார்யார்களில் முதல்வராகிய திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் திருமுறைமூன்றும்/ கயிலாயபரம்பரையாகிய திருவாவடுதுறை ஆதீனம் வித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரவர்களால் ஆராய்ச்சி செய்வித்து சென்னை வேப்பேரி சூளைசாமி பிள்ளை வீதியிலிருக்கும் கதிரப்பூர் சிங்காரவேலு முதலியார் கேட்டுக்கொண்டபடி திருமயிலை சுப்பராயஞானியரால் பதிப்பிக்கப்பட்டது. சென்னை, ஸி.பாஸ்டர் அண்டுகோ அச்சுக்கூடம்

1881 சைவசமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார் சுந்தரமூர்த்தி நாயனார் இம்மூவரும் திருவாய்மலர்ந்தருளிய தேவாரம் ஸ்தலமுறை/ திருக்கைலாசபரம்பரைச் சந்தான குரவருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் வகுத்தருளிய வண்ணம் அக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து சுப்பிரமணிய தேசிகசுவாமிகள் கட்டளையிட்டருளியபடிக்கும் திருப்பனந்தாட் காசி மடாலயாதிபதிகளாகிய ஸ்ரீகாசிவாசி இராமலிங்க சுவாமிகள் ஸ்ரீகாசிவாசி குமாரசாமிச்சுவாமிகள் வேண்டுகோளின்படிக்கும் மேற்படி ஆதீனத்துச்சுப்போதுவார் ஓதிய பண்ணின்படிக்கும் மதுரை ஆதீனத்தும் திருவாவடுதுறை ஆதீனத்தும் மற்றைய இடங்களிலும் உள்ள பிரதிரூபங்களைக் கொண்டு மதுரா புரிவாசியாகிய இ.இராமசுவாமிப்பிள்ளை என்று வழங்குகின்ற ஞானசம்பந்தப்பிள்ளையால் பரிசோதித்து அற்புதப் பதிகசரிதங்களோடு சென்னைப்பட்டணம் ஊ.புஷ்பரதசச்செட்டியாரது கலாரத்னகார அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1893 சைவசமயாசாரியார்களில் ஒருவராகிய நம்பியாரூரனென்னுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்/வித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரவர்களால் ஆராய்ச்சி செய்த பிரதிக் கிணங்க திருமழிசை கந்தசாமி முதலியார் குமாரரும் சொக்கபுரம் இராமலிங்கத்தம்பிரானவர்கள் மாணாக்கரும் சென்னை வீரசைவசமயாபிவிர்த்தி சபாப்பிரசங்கி யாருமாகிய வடிவேலு முதலியாரவர்களால் பார்வையிடு வித்து பால்குரிகி குமாரையரவர்கள் பௌத்திரர் சிவலிங்கையரவர்களால்...பதிப்பிக்கப்பட்டது. ஆதிகலாநிதி அச்சுக்கூடம்,

1898 சைவசமயாசாரியார்களில் ஒருவராகிய நம்பி யாரூரனென்னுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள்/வித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரவர்களால் ஆராய்ச்சி செய்த பிரதிக் கிணங்க திருக்கைலாசபரம்பரைப் பொம்மபும் ஸ்ரீ சிவஞானபாலைய தேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகளவர்கள் மாணக்கரு ளொருவரான க.வே.திருவேங்கடநாயுடு அவர்களால் பார்வையிடப்பட்டு காணியம்பாக்கம் முருகேச முதலியாரவர்கள் குமாரர் சண்முகமுதலியாரால் பதிப்பிக் கப்பட்டன. சென்னை ஆறுமுகவிலாச அச்சுக்கூடம்.

1900 சைவசமயாசாரியராகிய நம்பியாரூரரென்னும் சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த அடங்கன்முறைத் தேவாரப் பதிகங்கள்/ இஃது உரையாசிரியர் வித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியாரவர்கள் ஆராய்ச்சி செய்து பதிப்பித்த பிரதிக்கிணங்க புரசை அஷ்டாவதாநம் சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கர் திருமயிலை வித்வான் சண்முகம்பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்ட பிரதிக் கிணங்க மதுரை புத்தக வியாபாரம் இ.ரா.ம.குருசாமிக் கோனார் விருப்பத்தின்படி பிருங்கிமாநகரம் வேம்புலி முதலியார் குமாரர் நமசிவாய முதலியாரவர்களது பதிப்பிக்கப்பட்டது. சென்னை, நிரஞ்சனிவிலாச அச்சியந்திர சாலை, சார்வரி, ஆனி சண்முகம்பிள்ளை, திருமயிலை.

1903 மூவர் அருளிச்செய்த தேவாரப் பதிகங்களுள் பதினைந்து பதிகம்/ இஃது மைலம் சுப்பிரமணிய சுவாமிகளால் பார்வையிடப்பட்டு சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களாற்றமது பத்மநாப விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பி’கப்பட்டது.

1908 திருநாவலூர் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரம்/திருக்கைலாய பரம்பரைத் ருவாவடுதுறையாதீனத்து மஹாசந்நிதானம் அம்பலவாண பல தேசிகசுவாமிகள் கட்டளையிட்டருளியபடி மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான் வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்கமுதலியாரால் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து, பெரியமேட்டு வேங்கடாசலஞ் செட்டி யாரவர்கள் குமாரர் ஆதிமூலஞ்செட்டியாரால் பதிப்பிக்கப் பட்டது சென்னை கலாரத்நகார அச்சுக்கூடம்,

1915 தேவாரத் தோத்திரத்திரட்டு/ இஃது சைவசமயசாரிகளாகிய நால்வரது சரித்திரமும் தேவார திருவாசகத் திருமுறைகளினின்றும் தாயுமானவர் திருப்பாடல்களினின்றும் இராமலிங்கசுவாமி திருவருட் பாவிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டனவற்றை ஒருங்கு சேரத்திரட்டி வித்தியாரத்தினாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1915 தேவாரத் தோத்திரத்திரட்டு/ இஃது சைவசமயசாரிகளாகிய நால்வரது சரித்திரமும் தேவார திருவாசகத் திருமுறைகளினின்றும் தாயுமானவர் திருப்பாடல்களினின்றும் இராமலிங்கசுவாமி திருவருட்பா விலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டனவற்றை ஒருங்கு சேரத்திரட்டி சக்ரவர்த்தி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1916 சைவசமயாசாரிகளாகிய நால்வர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருவாசகத் தோத்திரத்திரட்டும், மேற்படியார்களது சரித்திரச்சுருக்கமும் அடங்கியுள்ளன. சாஸ்திர ஸஞ்சீவிநீ அச்சியந்திரசாலை,

1917 சைவசமாயாசாரியார்கள் அருளிச்செய்த தேவாரம் திருவாசக முதலிய தமிழ் வேதத் திருமுறைத்திரட்டு/ இதில் பன்னிருதிருமுறை, திருப்புகழ், திருவகுப்பு இவைகளினின்றும் திரட்டப்பட்ட முக்கியமான வைகளும், சமயசாரிய சரித்திர சங்கிரமும் சேர்ந்துள்ளன., மதராஸ் கணேஷ்ப்ரெஸ்.